**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**
**சாட்சிகளின் வாக்குமூலம்**
**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 104/2022**
**நாள்: 24.09.2025**
**அரசு தரப்பு சாட்சி** : 6 (LW7)

2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முனியராஜ் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( A2, A3, A4, A6, A7 ஆஜர். A1, A5 ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு ஏற்கப்பட்டது. )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் உப்பங்குளம் கிராமத்தில் குடியிருந்து, விவசாய வேலைகள் செய்து வருகிறேன். புகார்தாரர் எனது உடன்பிறந்த தங்கை. இந்த வழக்கில் இறந்துபோன கருப்பையா எனது மைத்துனர். சாட்சி முத்துராமு மேற்படி கருப்பையாவின் தந்தை. எனது மைத்துனர் எவ்வாறு இறந்தார் என்று எனக்குத் தெரியாது. கடந்த 2021ம் ஆண்டு ஒரு நாள் நான் எனது வீட்டில் இருந்தபோது காலை என் தங்கை வளர்மதி எனக்கு போன் செய்து, கருப்பையா இறந்துகிடப்பதாக சொன்னார். நான் இறந்துகிடந்த இடமான கீழநரியன் பஸ் ஸ்டாப்பிற்கு சென்று பார்த்தேன். கருப்பையாவிற்கு தலையில் இரத்தக்காயத்துடன் இறந்து கிடந்தார். போலிசார் அங்கு இருந்தார்கள். அவர்கள்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.24 15:47:34 +0530

மேற்படி கருப்பையாவின் பிரேதத்தை கமுதி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். போலிஸில் யார் புகார் கொடுத்தார்கள் என்று எனக்குத் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள அறிவேன் சாட்சியில் உள்ள கையொப்பங்களில் என்னுடைய கையொப்பம் எதுவும் இல்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய Sec.154 of Indian Evidence Act ன் படி அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.

<u>அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை</u>

என்னை போலிசார் விசாரித்தார்கள் என்றும், அப்போது எனது மைத்துனர் கருப்பையா இறந்தது தொடர்பாக எனது தங்கை வளர்மதி போலிஸில் புகார் கொடுத்தார் என்றும், அதில் நானும் சாட்சி முத்துராமு என்பவரும் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது கையொப்பம் போடவில்லை என்று மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

கீழக்காக்குளத்தை சேர்ந்த காளீஸ்வரி என்பவரை இந்த வழக்கின் 1வது எதிரி ரமேஷ்குமார் கையை பிடித்து இழுத்துவிட்டதால், மேற்படி ரமேஷ்குமாரை எனது மைத்துனரும், எனது தங்கை ஊரை சேர்ந்தவர்களும் ஊரில் கட்டிவைத்து அடித்து கண்டித்து அனுப்பிவைத்தார்கள் என்றும், அந்த முன்பகை காரணமாக எதிரிகள் என் மைத்துனரை கொன்றுவிட்டார்கள் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.09.24 15:47:39 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .